செ.வெ.எண்:08/மார்ச் நாள்:04.03.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 11 மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.5,00,000/-வீதம் மொத்தம் ரூ.55,00,000/-க்கான காசோலைகளை

## மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், ஆகியோர் வழங்கினார்கள்

---------

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.03.2016) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தரராஜ் அவர்கள், ஆகியோர் ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 11 மீனவர்களுக்கு நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.5,00,000/- வீதம் மொத்தம் ரூ.55,00,000/-க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்திற்குட்பட்ட பெரியபட்டிணம், மாரிவலசை, மங்களேஸ்வரி நகர், இந்திரா நகர், வேலாயுதபுரம் ஆகிய மீனவ கிராமங்களைச் சார்ந்த 11 மீனவர்கள் 01.12.2015 அன்று துபாய் கடற்கரை பகுதிகளில் மீன் பிடிக்க சென்ற போது, ஈரான் நாட்டு கடற்படையினரால் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி கைது செய்யப்பட்டனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொடர் முயற்சியின் மூலம் 02.03.2016 அன்று ஈரான் சிறையிலிருந்து மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு 03.03.2016 அன்று சென்னை திரும்பினர். அன்றைய தினமே, தமிழக அரசின் செலவில் மீனவர்கள் அனைவரும் பாதுகாப்பாக அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 11 மீனவர்களுக்கு நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.5,00,000/-வீதம் மொத்தம் ரூ.55,00,000/- வழங்கிட உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில், இன்றைய தினம், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தரராஜ் அவர்கள், ஆகியோர் ஈரான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 11 மீனவர்களுக்கு நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.5,00,000/- வீதம் மொத்தம் ரூ.55,00,000/-க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.முருகன், கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.ஆர்.தர்மர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.காமாட்சி கணேசன், மீன்வளத் துறை துணை இயக்குநர் திரு.காசிநாத பாண்டியன், மண்டபம் பேரூராட்சித் தலைவர் திரு.தங்க மரக்காயர், போகலூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு.நாகநாதன், உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**